/மின்னஞ்சல்/

தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 6
ந.க.எண்.89982/அ5/இ4/2012, நாள் 28.04.2022

பொருள்: தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி – ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கு பணிவரையறை செய்து ஆணையிடுவது தொடர்பாக.

பார்வை: சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண்.24224/அ5/இ4/ 2020, நாள் 05.07.2021 மற்றும் ந.க.எண்.89982/அ5/இ4/ 2012, நாள் 20.09.2021

---

பள்ளிக்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு / நகராட்சி / மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி / உயர்நிலைப்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஆய்வக உதவியாளர் பணியிடத்திற்கு கீழ்க்கண்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புகள் வரையறை செய்து ஆணையிடப்படுகிறது.

<u>கணிதம் பாடம் தொடர்பான ஆய்வகப் பணிகள்</u>

- கணித ஆய்வகத்திலுள்ள அனைத்து Models-ம் Chapter wise பிரித்து சுத்தப்படுத்தி இருப்புப் பதிவேட்டில் சரியாக வைக்கப்பட வேண்டும்.
- கணித ஆய்வகத்திலுள்ள கணித மாதிரிகள் அனைத்தும் ஆய்வக உதவியாளரின் பொறுப்பில் இருக்க வேண்டும்.
- 3D, 2D Models, Geometrical Models அனைத்தும் பாடவேளையின் போது மாணவர்களிடம் கொடுத்து, சரிபார்த்து வாங்கி வைக்க வேண்டும்.
- கணித ஆய்வகத்திலுள்ள கணினியை சுத்தமாக வைப்பதோடு, மின்சார ஒயர்களை சரிபார்த்து பராமரிக்க வேண்டும்.
- கணித ஆய்வக பாடக்குறிப்பேடுகளை மாணவர்களிடமிருந்து வாங்கி வைக்க வேண்டும்

<u>அறிவியல் பாடம் தொடர்பான ஆய்வகப் பணிகள்</u>

- பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்களை பராமரித்தல் மற்றும் ஆய்வுக்கூட உபகரணங்களை பராமரித்தல் (Maintenance of Microscopes, Models, Specimens, Slides, Glass apparatus etc.)
- இருப்பு பதிவேடு பராமரித்தல்
  - (i) நுகரும் தன்மையுள்ள ஆய்வகப் பொருட்கள் பதிவேடு
  - (ii) நுகரா தன்மையுள்ள ஆய்வகப் பொருட்கள் பதிவேடு
  - (iii) உடைப்பு பொருள் பதிவேடு.
- செய்முறை பாடவேளைகளில் ஆய்வகத்தை தயார் செய்தல் மற்றும் முன்னேற்பாடுகள் செய்தல்

- செய்முறை பாடவேளையின்போது மாணவர்களுக்கு ஆசிரியர் கூறும் ஆய்வகப் பொருட்களை / உபகரணங்களை கொடுத்தல் செய்முறை செயல்பாட்டிற்கு பின் ஆய்வகப் பொருட்களை / உபகணங்களை மாணவர்களிடமிருந்து திரும்பப் பெற்று மீண்டும் உரிய இடத்தில் வைத்து இருப்பில் சேர்த்தல்.
- வெப்பப்படுத்தும் உபகரணங்களான (Stove, Burner of any kind, Induction Stove, Gas etc.) ஆகியவற்றை பாதுகாப்பாக வையாளுவதை உறுதி செய்யும் பொருட்டு ஆசிரியருக்கு துணை நிற்றல்.
- செய்முறை பாடவேளைகளிலும், தேர்வு நேரங்களிலும் கரைசல்களை (Test Samples, chemical Reagents) தயார் செய்தல்.
- ஆசிரியர் கூறும் ஆய்வகப் பணிகளை மறுப்பின்றி செய்தல்
- ஆய்வக உதவியாளர் மேற்பார்வையின் கீழ் தூய்மைப் பணியாளர்களை பயன்படுத்தி அறிவியல் ஆய்வகத்தை சுத்தம் செய்து பராமரித்தல்.
- செய்முறை தேர்வின் போது தேர்விற்கான முன்னேற்பாடு செய்தல், வினாத் தாள் வழங்குதல், விடைதாள் வாங்குதல் மற்றும் தேர்வு முடியும் வரை அனைத்து செயல்களுக்கும் (Budling and Sealing) ஆசிரியருக்கு துணை நிற்றல்.
- அரசு பொதுத்தேர்வின் போது மாணவர்களின் செய்முறை பதிவேடுகளில் உரிய இடங்களில் முத்திரையிடுதல். (External Examiner, Internal Examiner, Chief Superintendents seal)
- பொதுத் தேர்வு முடிவடைந்தபின் மாணவர்களின் பதிவேட்டில் துளையிடுதல்.

<u>கணினி அறிவியல் பாடம் தொடர்பான ஆய்வகப் பணிகள்</u>

- கணினி ஆய்வக இருப்புப்பதிவேடு / Hi-Tech Lab & ATAL Tinkering Lab உபகரணங்கள் மற்றும் செயல்பாடுகள் கவனித்தல் / பராமரித்தல்.
- செய்முறை தேர்வின்போது மாணவர்களது செய்முறை பதிவேட்டில் துளையிட்டு கொடுத்தல்.

<u>மனையியல் ஆய்வகம் - Home Science Lab & Food Service Management Lab தொடர்பான ஆய்வகப் பணிகள்</u>

- ஆய்வக உபகரணங்களை கையாளும் திறன் அறிந்திருக்க வேண்டும்.
- தயாரிக்க உதவும் பாத்திரங்களை சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். பாத்திரம் கழுவுமிடம், அலமாரிகள்/பொருட்கள் சேமிக்கும் இடம் சுத்தமாக பராமரித்திட வேண்டும்.
- பொருட்களை சரியான பாத்திரத்தில் வைத்து பாதுகாத்திட வேண்டும். (உணவு தயாரிக்க உதவும் பொருட்கள்)
- சமைக்கத் தேவையான பொருட்களை வாங்கி வருதலும், சரியான முறையில் பாதுகாத்து வைத்திட வேண்டும்.
- பொருட்கள் வாங்கிய பில்லை சரியானபடி பராமரிக்க வேண்டும்.

- காலாவதியான பொருட்களை, ஆசிரியருக்கு தெரிவித்து அவரது அனுமதியுடன் அகற்றுதல் வேண்டும்.
- சிலிண்டரிலுள்ள திருகு மற்றும் ரெகுலேட்டரை சரியானப் பராமரித்திட வேண்டும். தயாரிப்பு இல்லாதபோது அல்லது முடிந்தபிறகு, ரெகுலேட்டரை மூடி வைத்திட வேண்டும்.
- தீயணைப்பானைப் பயன்படுத்த தெரிந்திருத்தல் அவசியம்.
- மணல் நிறைந்த வாளிகளில் குறைந்தது இரண்டை ஆய்வகத்தில் வைத்திருக்க வேண்டும்.
- குளிர்சாதனப் பெட்டியை சரியான முறையில் பராமரிக்க வேண்டும்.
- செய்முறை நடைபெறும் தருணத்தில் ஆய்வகத்தை தயார் நிலையில் வைத்திருத்தல், முன் தயாரித்தலில் உதவி செய்தல். சுத்தம் செய்தலில் உதவுதல் வேண்டும்.
- இருப்புப் பதிவேடு பராமரித்திட வேண்டும்.
- உடைந்த பொருள் பதிவேடு பராமரித்திட வேண்டும்.
- மாணவிகளுக்கு தேவையான பொருட்கள், பாத்திரங்கள் வழங்க உதவிட வேண்டும்.
- மலர் அலங்காரம் மற்றும் சாயமிடுதல் செய்முறை நடைபெறும் போது தேவையான பொருளை வாங்கி தயாராக வைத்திருக்க வேண்டும்.
- மேசை தயாரித்தலில் உதவிட வேண்டும்.
- அலமாரிகளில் வகுப்பு வாரியான பயிற்சி ஏட்டினை அடுக்கி வைக்க வேண்டும் (Record)
- மொத்த ஆய்வக பராமரிப்பில் முழு கவனம் செலுத்திட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தவிர ஆய்வகத்தில் செய்முறை பாடவேளை இல்லாத நாட்களில் அவசர பணிநிமித்தம் காரணமாக இதர அலுவல் சார்ந்த பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என ஆணையிடப்படுகிறது. இச்செயல்முறைகள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கவும், இவ்வாணைப்படி ஆய்வக உதவியாளருக்கு பொறுப்புகள் வழங்குவதோடு வரையறுக்கப்பட்டுள்ள பணிகள் சரியாக மேற்கொள்ளப்படுவதை ஆய்வு செய்யவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

29/4/22

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்: அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்: அரசு முதன்மைச் செயலர், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9 (தகவலுக்காக).

ந.க.எண் :- 1344/அ4/2022. நாள் :- 29.07.2022

அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில், பணிபுரியும், இடைநிலை உபரியாளர்கள் பணிமாறுதல்களுக்கு, பணிவிடுவிப்பு செய்து. பள்ளிக்கல்வி இணையதளத்தில் பதிவேற்றுக. மேலும் இடைநிலை உபரியாளர்களை விடுவிக்கவும். இதுவரை அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

விடுவிப்பு நடைமுறைகள்:
(3) பக்கம்.

பெறுநர்

தலைமை ஆசிரியர்கள்
அரசு உயர்/மேல்நிலைப்பள்ளிகள்_
வேலூர் மாவட்டம்.

ஒம்/-
Chief Educational Officer
Vellore-632 009.

29/7/22